தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன், Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16-2-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலையில் மூலிகைப்பயிர்கள் கருத்தரங்கு நடைபெற்றது**

மருந்துப்பயிர்கள் காப்பகம், மேம்பாடு என்ற அமைப்பானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்துடன் இணைந்து மருந்து மற்றும் நறுமணப் பயிர்களில் இரண்டு நாள் தேசிய கருத்தரங்கு பிப்ரவரி 16-17, 2017ல் நடைபெறுகிறது.

இந்த கருத்தரங்கானது ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள் தங்களது அறிவியல் கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்துவதற்குரிய ஒரு தளமாக அமைந்துள்ளது. இனவகைகளை பாதுகாத்தல், மேம்படுத்தப்பட்ட உற்பத்தி தொழில் நுட்பங்கள், உயிரியல் தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்புக்கூட்டல் ஆகிய தலைப்புகளில் கட்டுரைகள் விவாதிக்கப்பட்டன. சுமார் 250 ஆராய்ச்சியாளர்கள் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர். தேசிய மூலிகைப் பயிர்கள் வாரியமானது இக்கருத்தரங்கிற்கு நிதியுதவி அளிக்கிறது.

இக்கருத்தரங்கில், முனைவர். கு. இராமசாமி, துணைவேந்தர் அவர்கள், பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் முனைவர். ஜி.பி. துபே அவர்களின் அறிய கண்டுபிடிப்பான, உயிரியல் மூலக்கூறுகளை வைத்து சர்க்கரை வியாதி - வகை IIவை குணப்படுத்தலை பாராட்டினார். மேலும் அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதினை வழங்கி கௌரவித்தார்.

பத்ம ஸ்ரீ முனைவர். டி. கிருஷ்ணகுமார், ஆரிய வைத்திய பார்மஸியின் இயக்குநர், அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தின் வேந்தர், ஆயுஸ் துறையின் வளர்ச்சியை விளக்கினார். முனைவர் துபே அவர்கள் பாரம்பரிய மருத்துவ அறிவானது உலக அளவில் மருந்துப்பயிர்களில் சந்தைப்படுத்தலில் மிகவும் அவசியம் எனவும் அந்த அறிவானது மதிப்பீடு

செய்யப்படுதல் வேண்டும் என வலியுறுத்தினார். சர்க்கரை வியாதி வகை - IIவை குணப்படுத்தும் மருந்து செடிகளை வணீக ரீதியாக பயிரிட வேண்டும் என வலியுறுத்தினார்.

கோயமுத்தூர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர், முனைவர். மு. ஜவஹர்லால், புதுடெல்லி தேசிய மூலிகைப் பயிர்கள் வாரியம், இணை இயக்குநர், முனைவர். லலித் நாராயணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

முனைவர் ஜி.பி. ராவ், செயலாளர், மருந்துப்பயிர்கள் காப்பகம், மேம்பாடு அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

மேலும் இக்கருத்தரங்கின் ஒரு நிகழ்வாக இந்தியா வெட்டிவேர் இணையதளமானது, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழத்தில் இன்று 16-2-2017 நிறுவப்பட்டது. இந்த இணையதளமானது, இந்தியாவில் வெட்டிவேர் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்டது. உலகளவில் வெட்டிவேரானது சுற்றுப்புற சூழலை மேம்படுத்துவதற்காக மட்டுமில்லாமல், மண் அரிமானம் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றுக்காக பயன்பட்டு வருகிறது. இந்த இணையதளமானது சுற்றுச்சுழல் பாதுகாத்தல், சிறந்த இன வகைகளை கண்டறிதல், மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களை உருவாக்குதல், எண்ணெய் பிரித்தெடுக்கும் முறைகள் மற்றும் மதிப்புக்கூட்டல் ஆகிய நோக்கங்களைக் கொண்டுள்ளது.

இந்த இணையதளமானது ஆலோசனை குழு, முக்கிய உறுப்பினர்கள் அடங்கிய குழு ஆகியவற்றை கொண்டுள்ளது. முக்கிய குழுவில் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் அடங்குவர்.

**இந்த இணையதளத்தின் உறுப்பினர்களின் கட்டணம் விபரம் :**
**வருடாந்திர சந்தா**

உழவர்கள், மாணவர்கள் : Rs.100/-
விஞ்ஞானிகள் மற்றும் பொதுமக்கள்: Rs.250/-

**ஆயுள் சந்தா**
தனி நபர் : Rs.3000/- **(10 வருடம்)**
நிறுவனங்கள் : Rs.5000/- **(10 வருடம்)**

<u>தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி</u>
செயலாளர்,
இந்தியா வெட்டிவேர் இணையதளம்,
நறுமண மற்றும் மூலிகைப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகம்,
கோயம்புத்தூர் – **641 003.**
med@tnau.ac.in / **0422-6611365**

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்